https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்


07TH JULY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 87



## ஹிருணிகாவுக்கு சிறையில் சலுகைகள் இல்லை

சிறையில் இருக்கும் முன்னாள் எம்பி ஹிருனிகாவுக்கு விசேட சலுகைகள் எவையும் வழங்கவில்லை என்றும் அவர் சாதாரண கைதிகளுடனேயேயே உள்ளார் என்றும் சிறைச்சாலைகள் ஊடாகப்

02 ➤



## முட்டைக்கும் இனி VAT வரி

அடுத்த வருடம் ஜனவரி முதல் முட்டைக்கும் வட் வரியை விதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதேவேளை,நுகர்வோர் அதிகாரசபை நிர்ணயிக்கும் விலைக்கு முட்டைகளை விற்பனை செய்ய முடியாது என்று முட்டை

02 ➤

# சொத்து விபரங்களை சபாநாயகரிடம்

# இதுவரை சமர்பிக்காத 100 எம்பிக்கள்



தமது சொத்து விபரங்களை சபாநாயகரிடம் சமர்ப்பிக்காமல் 100 எம்பிக்கள் இழுத்தடித்து வருகின்றனர் என்று அறிய முடிகிறது.

169 எம்பிக்கள் தமது சொத்து விபரங்களை ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.அதில் 69 பேர் மட்டுமே இதுவரை சமர்ப்பித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அவர்களது சொத்து விபரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.



## ஜனாதிபதி பதவி காலம்: விசேட சட்டமூலம்

ஜனாதிபதியின் பதவி காலம் ஐந்து வருடங்களா அல்லது ஆறு வருடங்களா என்று எழுந்துள்ள குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அரசால் நாடாளுமன்றத்துக்கு விசேட சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

இது தொடர்பான யோசனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் கடந்த வாரம் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டது.அதன் அடிப்படையிலேயே சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது.




**கல்விமான்களின் வெளியேற்றம்**

## 300 வீதத்தால் அதிகரிப்பு



300 வீதமான கல்விமான்கள் தொழிலுக்காக இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர் என்று பிரித்தானிய BBC ஊடகம் தெரிவித்துள்ளது.இதற்கான முக்கிய காரணம் அரசால் கொண்டுவரப்பட்ட ஊதிய வாரியாகும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான், நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புது சுடர்
www.puthusudar.lk
2024 JULY 07 - SUNDAY

# மொட்டின் தனி வேட்பாளர்

ஜனாதிபதி தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாதபோதிலும், அதற்கான சூடு மட்டும் குறையவே இல்லை.அது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே செல்கிறது. எதிர்க்கட்சிகளும் ஆளுங்கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இத்தேர்தலையொட்டி தினமும் ஏதாவது ஒரு புது தகவல் வெளிவந்துகொண்டே இருக்கிறது. அதில் ஒன்றுதான் மொட்டு கட்சி தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என்ற மஹிந்த ராஜபக்சவின் அறிவிப்பு.

அது உண்மையாக இருக்குமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாடு அவ்வளவுதான்.மொட்டும் ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து போட்டியிட்டால்கூட ரணில் வெல்வது கஷ்டம் என்ற நிலைமை இருக்கும்போது,ரணிலை தனியே விட்டுவிட்டு மொட்டு தனியே இறங்கினால் ரணில் போட்டி என்ற வட்டத்துக்குள்ளேயே வரமாட்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டு கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.
ஒரு தரப்பு ரணிலை பொது வேட்பாளராக நிறுத்தி மொட்டு கட்சி அவருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது.இன்னொரு தரப்பு மொட்டு தனியாக வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சொல்கிறது.

அரசில் இணைந்திருக்கும் மொட்டு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ரணிலுக்கே ஆதரவு.அமைச்சுப் பதவிகள் கிடைக்காத மொட்டு எம்பிக்கள் மத்தியிலும் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன.

மொட்டின் இளம் எம்பிக்கள் தனியான வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று கூறுவது மாத்திரமல்ல நாமல் ராமஜபக்சவையே நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றனர்.

ஆனால்,பசில் உள்ளிட்ட சீனியர்களுக்கு இதில் உடன்பாடு கிடையாது.அவர்கள் ரணிலுக்கே ஆதரவு வழங்குகின்றனர்.

கோத்தாபய ராமஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டதன் பின்னர் ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் பசில் ராஜபக்சதான்.

பசிலின் பார்வையில் ரணில் எந்த நோக்கத்துக்காக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை ரணில் நிறைவேற்றிவிட்டார். அதாவது,பொருளாதார முன்னேற்றம் மற்றும் ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு.

இதனால்,மீண்டும் ரணிலே ஜனாதிபதியாக வர வேண்டும் என்று பசில் விரும்புகிறார்.அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பசில் ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யத் தொடங்கினார்.

ஆனால், மகிந்த ராஜபக்சவோ பசில் போட்டியிட வேண்டும் என்று விரும்பினார்.பசிலுக்கு விருப்பமில்லை.ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை விடவும் அமெரிக்க பிரஜா உரிமையே அவருக்கு மேல்.

அமேரிக்கா பிரஜா உரிமையை இரத்துச் செய்து கோத்தா படும் பாடு தெரியும்தானே.அதனால் பசில் அதை ரத்து செய்ய விரும்பவில்லை.

இதனால்தான் நாமலை இறக்க வேண்டும் என்று கட்சிக்குள் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.இப்போது தனி வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்று மஹிந்த கூறி இருப்பதானது நாமலை மனதில் வைத்துக்கொண்டுதானோ தெரியாது.

ரணிலை பொது வேட்பாளராக இறங்கினாலும் வெல்ல முடியாது என்று தெரிந்ததனால் நாமலை மொட்டின் தனி வேட்பாளராக இறக்கி அவரைப் பதப்படுத்தி எடுப்போம் என்று மஹிந்த எண்ணுகிறாரோ தெரியாது.

## முட்டைக்கும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொது செயலாளர் எம்.எச்.டி.ஆர் .அலகக்கோன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை முட்டை 43 மற்றும் 44 ரூபாவிற்குடப்பட்ட விலையிலும் சிகப்பு முட்டை 45 மற்றும் 49 ரூபாவுக்கிடைப்பட்ட விலையிலும் விற்க வேண்டும் என்று நுகர்வோர் அதிகாரசபை கடந்த 2ஆம் திகதி விலை நிர்ணயித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹிருணிக்காவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளர் காமினி திஸாநாயக்க கூறியுள்ளார்.

ஹிருனிகாவுக்கு மூன்று வருட சிறைத் தாண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வங்குரோத்து நிலை நீங்கிவிட்டதா?

## மக்களின் வங்குரோத்து நிலை அப்படியே இருக்கும்போது-வறுமை அதிகரித்துக்கொண்டே செல்லும்போது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுவிட்டது என்று கூறுவது பித்தலாட்டம் இல்லையா?



ஜனாதிபதி தேர்தல் நடக்குமா ,இல்லையா என்ற சந்தேகம் ஒருபுறம் இருந்தாலும்.அந்தத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான செயற்பாடுகளில் அரச தரப்பு ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும்,தேர்தல் பிரசாரங்கள் நாடுபூராகவும் பரபரப்பாக இடம் பெற்றுக்கொண்டிருப்பதைக் காணலாம்.

தேர்தலை ஒத்திப்போடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரச தரப்புகூட,தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மும்முமுரமாக நகர்த்திச் செல்கிறது.

ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க அரச தரப்புக்கு ஒரு வகையான படபடப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.எல்லாமே தேர்தல் தோல்வி பயம்தான்.

அரச தரப்பு ஆய்வு செய்தாலும் சரி,வேறு தரப்புகள் ஆய்வு செய்தாலும் சரி.எதிர்கட்சிகள்தான் முன்னிலையில் உள்ளன.இதனால் குழப்பமடைந்துள்ள அரசு இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி எப்படியாவது தேர்தலை வென்றுவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறது.

ஒருபுறம் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடடிக்கை எடுக்கிறது. இன்னொருபுறம் ஐந்து வருடமாகவுள்ள ஜனாதிபதி பதவி காலத்தை 6 வருடங்களாக நீடிப்பதற்கு முயற்சி செய்கிறது. மேலும்,சர்வஜன வாக்கெடுப்பு அது,இது என்றெல்லாம் கூறுவதை அவதானிக்கலாம்.

இவை எதுவுமே எடுபடாது என்று புரிந்துகொண்ட ஜனாதிபதி எப்படியாவது தேர்தலை நடத்தி அதில் வெற்றிபெற வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளார்.

கூட்டணி அமைத்தல்,ஏனைய கட்சி எம்பிக்களுக்கு வலைவீசுதல்,மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவீசுதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் என அரசின் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதில் புதிதாக இணைந்துள்ள விவகாரம்தான் சர்வதேச கடன் மறுசீரமைப்பு விவகாரம்.அதை தூக்கிப் பிடித்து-அதனால் நாடு எல்லா பிரச்சினையிலும் இருந்து விடுபட்டுள்ளதுபோல் காட்டி பிரசாரம் செய்து வருகிறது அரச தரப்பு.

அதிலும் நகைச்சுவையான விடயம் என்னவென்றால் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது என்று அறிவித்தமைதான்.

ரணிலை மக்கள் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் முற்றாக நிராகரித்துவிட்டார்கள். கோத்தா ஜனாதிபதி பதவியை விட்டு ஓடியதும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வேறு எவரும் மொட்டு கட்சிக்கு கிடைக்காததால் ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக்கினர்.

அன்றைய சூழலில் மக்களிடமிருந்து ராஜபக்ச குடும்பம்-மொட்டு கட்சி பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியது. அந்த ஆபத்தில் இருந்து இவர்களை காப்பாற்றுவதற்கு ரணில்தான் பொருத்தமானவர் என்று ராஜபக்ச குடும்பம் அடையாளம் கண்டதால் ரணிலை ஜனாதிபதியாக்கினர்.

எந்த நோக்கத்துக்காக ரணில் நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை சரியாக நிறைவேற்றியுள்ளார்.ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு முற்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரணில் ஜனாதிபதியாகி மின் வெட்டையும் எரிபொருள் வரிசையையும் நீக்கியுள்ளார். ஆனால்,பொருளாதார பிரச்சினை கூடியுள்ளது.

அவர் வந்த பின்தான் மின் கட்டணம் உட்பட பல கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன்ன.புது புது வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. விலைவாசி அதிகரித்தது..

ஆனால்,பொருளாதாரத்தை சரி செய்துவிட்டோம் என்று அரசு கூறித் திரிகிறது. ஆனால்,அடிமட்டத்தில் நிலைமை வேறு.மக்களுக்கு தொடர்ந்து பிரச்சினைதான்.

வறுமை குறையவில்லைபொருட்களின் விலைகள் குறையவில்லைமின் கட்டணம் குறையவில்லைரிபொருட்களின் விலைகள் குறையவில்லை வரிகள் குறையவில்லை.வேலை வாய்ப்புக்கள் இல்லை.

ரணில் ஜனாதிபதியானதும் நடந்த கொடுமைகள் இவை. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் அப்படியே வைத்துக்கொண்டு நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது என்று கூறுவது நகைச்சுவையிலும் நகைச்சுவை.


மக்களின் வங்குரோத்து நிலை அப்படியே இருக்கும்போது-வறுமை அதிகரித்துக்கொண்டே செல்லும்போது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுவிட்டது என்று கூறுவது பித்தலாட்டம் இல்லையா?

இந்தக் கூற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கும் மக்கள் கோபமடைகிறார்கள். மக்களை ஜனாதிபதி இப்படி ஏமாற்றுகிறாரே என்று கூறுகிறார்கள்.

இதெல்லாம் தேர்தல் கூத்துக்கள் என்பதை விளங்கிக்கொண்ட மக்கள் இந்தக் கூத்துக்களுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

உண்மையில், அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலை அடைந்திருப்பது இந்த ஜனாதிபதிதான் என்று தெளிவாகத் தெரிகிறது.

# சமூக ஒற்றுமை மற்றும் பெருந்தகைமையின் வெற்றியை பறைசாற்றிடும் நிகழ்வு



இலங்கையில் புகழ்பெற்ற இலாப நோக்கற்ற தொண்டு நிறுவனமான CareStation நடாத்திய "Inspire and Ignite: An Evening of Impact" நிகழ்வு வெற்றிகாரமானதொரு நிகழ்வாக அமைந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஜுன் 15, 2024, சனிக்கிழமை அன்று தெஹிவளையில் அமைந்துள்ள ஐக்கான் ஹையாத் இல் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூகத் தலைவர்கள், பரோபகாரர்கள், நன்கொடையாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அர்ப்பணிப்பாளர்கள் போன்றோர் “பின்தங்கிய சமூகங்களை ஆதரித்து மேம்படுத்துதல்” என்ற சீரிய நோக்கத்தின் கீழ் ஒன்றிணைந்தனர் என்று கூறினால் மிகையாகாது.

ரஸ்னி றாஷீக் மற்றும் காலிப் காசிம் ஆகியோரால் இணைந்து நிறுவப்பட்ட CareStation நிறுவனம், அரசால் பதிவு செய்யப்பட்ட, சமூக மேம்பாடு மற்றும் சமூக நலனை கருத்திற்கொண்டு செயற்படும் அரசியல் மற்றும் மத சார்பற்ற அமைப்பாகும். 22 மாவட்டங்களில் 368க்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட தன்னார்வலர்களுடன் இணைந்து CareStation ஆண்டு முழுவதும் பாரிய சேவைகளை புரிந்து வருகின்றது.

CareStation இன் சாதனைகள் மற்றும் அதன் சேவை நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் உறுதியான மனப்பாங்கு ஆகியவற்றை கொண்டாடும் நிகழ்வாக இம்மாலை வேளை அமைந்தது. இந்நிகழ்வில் CareStation இன் இணையதளத்தை மீள ஆரம்பித்தல் மற்றும் ஆதரவற்ற நலிவுற்ற குழந்தைகளுக்கான புதிய இலவச கல்வி மையத்தின் திறப்பு விழா ஆகிய இரு குறிப்பிடத்தக்க மைல்கற்களும் கொண்டாடப்பட்டன.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களான திருமதி பேரியல் அஷ்ரப் மற்றும் திருமதி மிலானி சல்பிட்டிகோரள ஆகியோர் ஆற்றிய உரைகள் பார்வையாளர்களிடையே ஆழமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தின. திருமதி அஷ்ரப் அவர்கள் சமூக ஒற்றுமையின் முக்கியத்துவம் மற்றும் சமூக நலனை மேம்படுத்துவதில் CareStation போன்ற நிறுவனங்களின் பங்கு பற்றி பேசினார்.

திருமதி சல்பிட்டிகோரள கல்வியின் மாற்றும் சக்தி மற்றும் சமூக ஆதரவு ஆகியவற்றை குறித்த தனது அனுபவங்களையும் நுண்ணறிவினையும் பகிர்ந்து கொண்டார்.

CareStation இன் மாற்று இயக்குனராகிய ரிஸ்கா மரிக்கார், தனது ஆரம்ப உரையில், சமூக ஈடுபாட்டின் முக்கியத்துவத்தையும் கூட்டு நடவடிக்கை மற்றும் செயற்பாட்டின் மாற்றும் சக்தி குறித்தும் எடுத்துரைத்தார்.

சக தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு அமைப்புகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தது, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான கூட்டுறவு மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

அவர்களின் இவ் வருகையானது சமூகத்தின் மிக அவசரமான தேவைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிணைந்து செயற்படுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. UNHCR, The Sisterhood Initiative, Tearz Foundation, Easter Attack Survivors Project போன்ற பல குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டன.

CareStation இன் திட்டங்களினால் பயனடைந்தவர்களின் உத்வேகமளிக்கும் உரைகள், இதயப்பூர்வமான சான்றுரைகள், மற்றும் விளக்கக்காட்சித் தொடர்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

CareStation இன் முன்முயற்சிகளின் ஆழ்ந்த தாக்கங்களை எடுத்துக்காட்டும் வகையிலமைந்த நான்கு வெற்றிக் கதைகள் பயனாளிகளால் இங்கு பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இக்கதைகள் நிதர்சன வாழ்க்கையில் இவ் அமைப்பின் பணிகளால் ஏற்படும் மாற்றங்களையும் தாக்கங்களையும் அடிக்கோடிட்டுக் காட்டின, மேலும் இந் நிதர்சனங்கள் பார்வையாளர்களில் பலரை கண்ணீரில் ஆழ்த்தின.

மற்றுமொரு மைற்கல்லாக இந்நிகழ்வில் CareStation இன் இணையதளம் மீள ஆரம்பிக்கப்பட்டது. இப் புதுப்பிக்கப்பட்ட Online இயங்குதளமானது, எங்களின் செயற்திறனின் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் நாங்கள் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கும், எங்கள் அமைப்பின் நோக்குகளை பிறருக்கு எத்திவைப்பதற்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கு உரிய வளங்களை வழங்குவதற்கும் ஆன தளமாக அமையும்.

இப் புதிய இணையதளம் பயனர்களுக்கு ஏற்ற இலகு வடிவமைப்பைக் கொண்டுள்ளது, இதனால் பார்வையாளர்களுக்கு எங்கள் திட்டங்களையும், முன்முயற்சிகளையும் மற்றும் அவற்றில் எவ்வாறு பங்குபற்றுவது போன்ற தகவல்களையும் எளிதாகக் கண்டறிய முடியும்.

இதில் எங்கள் அமைப்பின் தன்னார்வலர் வாய்ப்புகள், வெற்றிக்கதைகள், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விரிவான பகுதிகளும் உள்ளடங்கியுள்ளது.

இவ் இணையதளத்தின் மேம்படுத்தப்பட்ட செயற்பாட்டுத் திறன், எங்கள் ஆதரவாளர்களை இலகுவாக தொடர்பு கொள்ளவும், அவர்கள் எங்களின் தொடர் முன்னேற்பாடுகள் குறித்து தகவல் அறிந்து கொள்ளவும், மேலும் எங்களுடன் தொடர்பில் இணைந்திருக்கவும் உதவுகிறது.

இம் மீள் ஆரம்பம் தொழில்நுட்ப மேம்பாடு மட்டுமல்ல அதனையும் தாண்டி எமது அமைப்பின் வெளிப்படைத்தன்மை, அணுகல்தன்மை மற்றும் சமூக ஈடுபாட்டுக்கான அர்ப்பணிப்பு போன்றவற்றிற்கான சான்றாகும்.

இப் புதிய இயங்குதளம், எங்களின் பணியை மேம்படுத்துவதற்கும், பரந்தளவிலான பார்வையாளர்களை சென்றடைவதற்கும் மற்றும் சாதகமான மாற்றங்கங்களை ஏற்படுத்திட மேலும் பலர் எங்களுடன் இணைந்திடவும் முக்கியதொரு கருவியாக செயற்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்நிகழ்வானது ஆதரவற்ற நலிவடைந்த குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்கிடும் உன்னத நோக்கத்திற்குரிய முயற்சிகளின் பலனான CareStation இன் புதிய கல்வி மையத்தின் திறப்பு விழாவுடன் இனிதே நிறைவுபெற்றது.

இக் கல்வி மையம் முழுமையான கல்வி, தினசரி வாழ்க்கை நடைமுறைக்கான வழிகாட்டல்கள், மனநல ஆதரவு, தொழில் வழிகாட்டல்கள் மற்றும் தேவையுடைய குடும்பங்களுக்கான ஆதரவு போன்றவற்றினை வழங்கிடும்.

இது நம்பிக்கை மற்றும் வாய்ப்பின் கலங்கரை விளக்கமாக, முழுமையான கல்வி வளங்களையும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஆதரவையும் வழங்கிடும்.

இம்மாலை வேளையின் போது, ஊயசநளுவயவழைெ அதன் தன்னார்வலர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டும் விதமாக முக்கிய குழு உறுப்பினர்கள், நீண்ட காலமாக CareStation உடனிருந்த மூத்த ஊழியர்கள், உறுப்பினர்கள் மற்றும் சிறப்பாக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தன்னார்வலர்கள் என்று மூன்று கட்டங்களாக பாராட்டி விருதுகளை வழங்கியது.

இவ் அங்கீகாரங்கள், CareStation இன் நோக்கத்தினை முன்னெடுத்துச் செல்வதில் தன்னார்வலர்களின் இன்றியமையாத பங்கினை எடுத்துக்காட்டியது.

ரஸ்னி றாஷீக் இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார், அதன்போது அவர் ”எங்களுக்குக் கிடைத்த அமோக ஆதரவு மற்றும் தாராள பான்மைக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

Inspire and Ignite என்பது வெறுமனே நிகழ்வொன்றல்ல் இது நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றும் போது நாம் ஏற்படுத்தும் சாதகமான மாற்றங்களையும் நேர்மறையான தாக்கங்களையும் பறைசாற்றிடுமொரு இயக்கமாகும்.

இந்நிகழ்வு உண்மையிலேயே எமது சமூகத்தின் ஆர்வத்தினை தூண்டியுள்ளது, மேலும் அது ஏற்படுத்தக்கூடிய சாதகமான தாக்கங்களை காண நாங்கள் ஆவலாக உள்ளோம்.”

இந்நிகழ்வின் வெற்றியானது ஒற்றுமையின் சக்தி மற்றும் பொதுவானதொரு நோக்கத்திற்காக மக்கள் ஒன்றிணைந்தால் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் ஆகியவற்றுக்கான சான்றாகும்.

CareStation தனது இலக்கை தொடர்வதற்கும் சமூக மேம்பாடு மற்றும் சமூக நலனில் இன்னும் பாரியளவிலான முன்னேற்றங்களைச் செய்வதற்கும் எதிர்நோக்கி காத்திருக்கிறது.

CareStation குறித்த மேலதிக தகவல்களுக்கும் மற்றும் நீங்கள் எவ்வாறு அதன் செயற்பாடுகளில் பங்குபெறலாம் என்பது பற்றியும் அறிந்து கொள்ள தயவுசெய்து பின்வரும் வலைதளத்தைப் பார்வையிடவும் .

[www.carestationsl.org] (http://www.carestationsl.org).










# தேசிய சந்தைப்படுத்தல் விருதுகளை நடத்த திட்டம்

இலங்கையின் சந்தைப்படுத்தல் துறையில் முன்னணி நிறுவனமான இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (Sri Lanka Institute of Marketing) SLIM தேசிய சந்தைப்படுத்தல் விருதுகள் 2024 (SLIM National Sales Awards 2024) நிகழ்வை தொடர்ச்சியாக 24ஆவது முறையாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் விழாவில், 20 இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள சந்தைப்படுத்தல் நிபுணர்களின் செயற்றிறனைப் பாராட்டி விருதுகள் வழங்கப்படுவதுடன், இவ்விருது வழங்கும் நிகழ்வில் பங்குபற்ற இலங்கையின் சந்தைப்படுத்தல் நிபுணர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

இவ்வருடம் அதன் எண்ணக்கரு "சிறந்த நாயகர்கள்" (Heroes of Excellence) என்பதாகும். தெற்காசிய பிராந்தியத்தில் சிறந்த விருது வழங்கும் விழாவாக அறியப்படும் இந்நிகழ்வு, சர்வதேச தரத்திற்கு ஏற்ப சந்தைப்படுத்தல் நிபுணர்களை அடையாளப்படுத்தி, மதிப்பீடு செய்து, அதன் மூலம் SLIM வெற்றியாளர்களை அங்கீகரித்து உலக அரங்கில் உயர்நிலைக்கு கொண்டு செல்கிறது.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது நிறுவனங்கள் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பெண்களை ஊக்குவிப்பதில் H.E.R இன் ஒரு வருட நிறைவு



ஃபெம்ஸ் ஆரம்பித்த H.E.R அறக்கட்டளை, பெண்கள் தம் வாழ்வில் முகங்கொடுக்கும் சவால்களை கடந்து வருவதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டு இயங்குவதோடு, அதனை தமது செயற்பாடுகளின் அடிப்படை கொள்கைகளான உதவி, ஊக்கமளிப்பு மற்றும் எழுச்சி ஆகியவற்றின் கீழ் அமைந்த முன்னெடுப்புகளின் ஊடாக மேற்கொள்கிறது.

தமது முதலாவது ஆண்டை அறக்கட்டளை நிறைவு செய்யும் இவ்வேளையில் சமூகத் தடைகளை உடைக்கும் தமது நோக்கத்திற்காக மீண்டும் உறுதி பூண்டுள்ளது.

இப் பயணமானது, ஹேமாஸ் நுகர்வோர் வர்த்தகநாமப் பிரிவில் ஒரு முன்னணி பெண் சுகாதார பராமரிப்பு வர்த்தகநாமமான ஃபெம்ஸ், இலங்கையில் மாதவிடாய் சுகாதாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ள கதைகளை மறுவரையறை செய்து மகத்தான ஒரு மாற்றத்தின் ஊடாக தீவிரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற தேவையை இனங்கண்ட போதே ஆரம்பித்தது.

WaterAid மற்றும் தெற்காசியாவுக்கான UNICEF பிராந்திய அலுவலகம் இணைந்து தெற்காசிய பாடசாலைகளில் மாதவிடாய் கால சுகாதார நிலைமை தொடர்பாக நடாத்திய ஆய்வின் அடிப்படையில், இலங்கைப் பெண்களில் 66 வீதமானோர் பூப்பெய்தும் வரை மாதவிடாய் பற்றி ஏதும் அறியாதவர்களாக உள்ளனர்.

# ராஜாவுக்கு தேசிய வணிக விசேடத்துவ விருது



பெருமைக்குரிய இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வழங்கப்படும் மதிப்புமிக்க 2024 தேசிய வணிக விசேடத்துவ விருதை (National Business Excellence 2024) பெற்றுக்கொண்டுள்ளதன் மூலம், இலங்கையின் மிக விருப்பத்திற்குரிய நகையகமான ராஜா ஜுவலர்ஸ், அதன் விசேடத்துவத்திற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது. இந்த அங்கீகாரமானது.

நாட்டில் அதிக விருதுகளைப் பெற்ற நகை விற்பனை வர்த்தகநாமம் எனும் ராஜா ஜுவலர்ஸின் நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இலங்கையின் நகைத் துறையில் விசேடத்துவம், தரம், புத்தாக்கம் ஆகியன தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்புக்கு இது ஒரு அங்கீகாரமாக விளங்குகிறது.

தலைமைத்துவம், நிறுவன நிர்வாகம், திறன் மேம்பாடு, செயற்றிறன் முகாமைத்துவம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அணுகல், நிதிப் பெறுபேறுகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய கடுமையான அளவீடுகளின் அடிப்படையில், வணிக நிறுவனங்களை மிக ஆழமாக மதிப்பிடும் ஒரு பெருமைமிக்க அங்கீகாரமாக National Business Excellence Award விருது அமைகின்றது.

# ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் மாநாட்டை நடாத்தும் சவூதி



(காலித் ரிஸ்வான்)

2024ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதியை "உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினம்" ஆக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஒட்டிப்பிறந்த இரட்டையர்களின் நிலையைப் பற்றி வலியுறுத்தவும், அவர்களின் சிகிச்சை, பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு உட்பட சமூகத்தில் அவர்களுக்கான அங்கீகாரத்தை மேம்படுத்தவும் இந்நாள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைன், மொராக்கோ, கத்தார் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்த முயற்சியை சவூதி அரேபியா முன்மொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிறிப்பதற்கான இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, சவூதி அரேபியா இத்துறையில் உலகில் முன்னணி வகிக்கக் கூடிய நாடாக இருந்து வருகிறது.

சவூதி அரேபியா, 26 நாடுகளைச் சேரந்த 139 இரட்டையர்களை பரிசீலனைக்கு உட்படுத்தயுள்ளதோடு 61 ஜோடி இரட்டையர்களை வெற்றிகரமாகப் பிரித்தும் உள்ளது.

சவூதி ரோயல் கோர்ட்டின் ஆலோசகராகவும், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் (KSrelief) மேற்பார்வையாளர் ஜெனரலும், புகழ்பெற்ற குழந்தை அறுவை சிகிச்சை நிபுணருமான வைத்தியர் அப்துல்லா அல் ரபீஹ் அவர்களே சவூதி அரேபிய இணைந்த இரட்டையர் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24 அன்று "உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினத்தை" அனுஷ்டிக்க ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் தீர்மானமானது சவூதி அரேபியாவின் மனிதாபிமான முயற்சிகளுக்கு கிடைத்தை மிகவும் பெருமைக்குரிய அங்கீகாரமாகும் என அல் ரபீஹ் கருத்து தெரிவித்ததோடு, இந்த குழந்தைகளுக்கு உதவும் இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கவும் இரு புனித மசூதிகளின் பாதுகாவலர், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் ஆர்வத்தையும் கரிசனையையும் அல் ரபீஹ் மெச்சிப் பாராட்டியுள்ளார்.

உலக ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் தினத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், சவூதி அரேபியா 24-25 நவம்பர் 2024 அன்று ரியாத் நகரில் முதல் முறையாக சர்வதேச ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மாநாட்டை நடத்தவுள்ளது.

மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) மற்றும் சவூதி தேசிய காவல்படை சுகாதார விவகார அமைச்சகம் இணைந்து நடத்தும் இம் மாநாட்டில், உலகளாவிய மருத்துவ நிபுணர்கள், மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் விடயத்தில் ஆர்வமுள்ள பலர், வெற்றிக் கதைகள் மற்றும் ஒட்டிப் பிறந்த இரட்டையரைப் பிரிப்பதில் உள்ள சவால்கள் மற்றும் சாத்தியமான ஒத்துழைப்பு மற்றும் பரிந்துரைகளைப் பற்றி கலந்துரையாட ஒன்றுகூடவுள்ளனர்.

இந்த மாநாட்டில் "இணைந்த இரட்டையர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களில் பிரிவினையின் பன்முக தாக்கத்தை ஆராய்தல்" என்ற தலைப்பில் ஒரு குழுக் கலந்துரையாடல் அடங்கும், இது பிரிவினை அறுவை சிகிச்சையின் உடலியல், உளவியல் மற்றும் சமூக விளைவுகளை ஆராயும் விதத்தலும் அமையும்.

# கேர் ட்ரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கு எதிராக தடை உத்தரவு

கடந்த 8 தசாப்தங்களாக சுதேஷி கொஹொம்பவின் உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துனருமான Swadeshi Industrial Works PLC நிறுவனம், Care Trust International (Pvt) Ltd. அதன் தயாரிப்பு மூலம் அதன் சுதேஷி கொஹொம்பவின் புலமைச் சொத்துரிமைகளை மீறியதற்காக பல்வேறு தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளது. கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் கடந்த 2024 மே 14ஆம் திகதி இத்தடை உத்தரவை பிறப்பித்தது.

"சுதேஷி கொஹொம்ப" வர்த்தக முத்திரையின் பெருமைக்குரிய உரிமையாளராக விளங்கும் சுதேஷி இண்டஸ்ட்ரீஸ், கடந்த எட்டு தசாப்தங்களாக மூலிகை சவர்க்காரம் மற்றும் மூலிகை தனிநபர் பராமரிப்பு பிரிவில் சந்தையில் முன்னணியில் திகழ்கிறது.

Care Trust International (Pvt) Ltd. கொஹொம்ப தொடர்பான அதன் புலமைச் சொத்துரிமைகளை மீறுவதைத் தடுக்கும் வகையில் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி குறித்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.




# சுமை மற்றும் உள்ளடக்கிய வர்த்தகங்கள்

2024 சர்வதேச நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (ஆளுஆநுள) தினத்தை நினைவு கூரும் வகையில் 'இளைஞர்கள் தலைமையிலான பசுமை மற்றும் உள்ளடக்கிய வர்த்தகங்கள்' திட்டத்தின் வெற்றிகரமான முன்னோடி கட்ட நிகழ்வினை இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் கொண்டாடியது.

"இளைஞர்கள் தலைமையிலான பசுமை மற்றும் உள்ளடக்கிய வர்த்தகங்கள்" திட்டமானது அறிவு, திறன்கள், வளங்கள் மற்றும் வலையமைப்புகள் ஆகியவை சார்ந்த இளம் தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கியதாகும். அத்துடன் இத்திட்டமானது தற்போதுள்ள வர்த்தகங்களை பசுமையான மற்றும் உள்ளடக்கிய மாதிரிகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

'நிலையான தன்மைக்கான பாதைகள்: தொழில்முயற்சியாளர்களின் காட்சிப்படுத்தல் ' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, திட்டத்தின் அதியுயர் சிறப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இலங்கையைச் சேர்ந்த 30 இளம் வர்த்தகத் தலைவர்களுக்கு அவர்கள் தமது வர்த்தக செயற்பாடுகளை பசுமையானதாகவும் மேலும் உள்ளடக்கியதாகவும் மாற்றுவதற்கு புதுமையான தீர்வுகள் மற்றும் முக்கிய பங்குதாரர்களின் வலையமைப்புடன் அவர்கள் மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்வைக்கும் வாய்ப்பு கிடைத்தது.

# சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய ஊழியர்களை கௌரவித்த சன்ஷைன்



2023/24 நிதியாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனம், சிறந்த செயல் திறன்களையும் திறமைகளையும் வெளிப்படுத்திய ஊழியர்களை கௌரவிக்கும் முகமாக வருடாந்த விருது வழங்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

"எதிர்காலத்தை ஒளிரச் செய்யுங்கள்" (Ignite the Future) என்ற தொனிப்பொருளின் கீழ், சுகாதார சேவைகள், வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் விவசாய வணிகம் போன்ற அதன் வணிகத் துறைகளின் ஊழியர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கும் நிகழ்வ ஏற்பாடு செய்யப்பட்டது.

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், துணைத் தலைவர் விஷ் கோவிந்தசாமி, சன்ஷைன் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரமுடைய முக்கிய குழு உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்ட இந்த விருது வழங்கும் நிகழ்வில், 156 பேருக்குத் Merit, Excellence மற்றும் Chairman விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், 10 முதல் 20 ஆண்டுகள் வரை நிறுவனத்தின் வெற்றிக்காக உழைத்த ஊழியர்களின் விசுவாசத்தைப் பாராட்டி 89 நீண்டகால சேவை விருதுகளும் வழங்கப்பட்டன.

மேலும், பணியிட சிறப்பு பங்களிப்புகளுக்கான 13 விருதுகளும் இங்கு வழங்கப்பட்டன. 3000க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட சன்ஷைன் ஹோல்டிங்ஸின் வெற்றியில் சிறந்த பங்களிப்பை ஆற்றிய ஊழியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சியபத பினான்ஸ் நாவலப்பிட்டியிலும்

முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்காக, நாவலப்பிட்டியில் கம்பளை வீதி, இலக்கம் 54 இல் தனது 49வது கிளையை அண்மையில் திறந்து வைத்துள்ளது.

அதன் நாடளாவிய வலையமைப்பிற்கு புதியதொரு சேர்க்கையான நாவலப்பிட்டி கிளையானது, அதன் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் முழுமையான நிதித் தீர்வுகள் மூலம், வர்த்தக சமூகத்தை வலுவூட்டுவதில் முக்கிய பங்கை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"நாவலப்பிட்டியானது விவசாயத் துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி யாளர்களைக் கொண்ட பிரதேச மாகும். தேயிலை மற்றும் கோப்பி பயிர்ச் செய்கையில் இருந்து மசாலா உற்பத்தி வரை, மக்கள் விவசாயத்தை தங்கள் முதன்மை யான வாழ்வாதார மாகக் கொண்டு ள்ளனர்.




# DFCC இன் அன்னையர்கள் கௌரவிப்பு



சர்வதேச அன்னையர் தினத்தையொட்டியதாக, தனது பணியாளர்கள் மத்தியிலுள்ள அனைத்து அன்னையரையும் போற்றிக் கொண்டாடி, கௌரவிக்கும் வகையில் னுகுஊஊ வங்கி பல முயற்சிகளை அண்மையில் முன்னெடுத்துள்ளது.

அலுவலகத்தினையும், தனிப்பட்ட பொறுப்புக்களையும் சமாளிக்கும் வகையில் இரண்டையும் சமமாக முன்னெடுப்பதற்கு அயராது உழைக்கின்ற பெண்கள், தொழில்ரீதியாகவும், அன்னையர் என்ற வகையிலும் தமது பொறுப்புக்களை சிறப்பாக முன்னெடுப்பதை உறுதி செய்கின்றனர்.

வங்கியின் அன்னையர் தினக் கொண்டாட்டங்களின் உச்சமாக, 25 ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்துள்ள பணியாற்றும் அன்னையருக்கான விசேட பாராட்டு வைபவமொன்று இடம்பெற்றது.

மகத்தான வகையில் தமது விடாமுயற்சியுடன், எந்த சூழ்நிலையையும் தாங்கும் சக்தி படைத்த பெண்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் ஒரு வாய்ப்பாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

# மிகவும் விரும்பப்படும் பொதுக் காப்புறுதி வர்த்தக நாமம்




பரந்த பொதுக் காப்புறுதித் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதிப் பிரிவு (SLICGL), இலங்கையின் மதிப்புமிக்க வர்த்தக வெளியீடான LMDயின் அடிப்படையில், 2024ஆம் ஆண்டின் மிகவும் விரும்பப்படும் பொதுக் காப்புறுதி வர்த்தக நாமமாக பெயரிடப்பட்டு அதன் உறுதிப்பாட்டை மீண்டும் நிரூபித்துள்ளது.

இந்த அங்கீகாரம், தடையற்ற வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் SLICGLஇன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை மற்றும் நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளைப் புரிந்துகொண்டு நிவர்த்தி செய்வதற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

SLICGL, அனைத்து பிரஜைகளையும் உள்ளடக்கிய வகையில் தனித்துவமான சேவை மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த வழங்கல்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பாதுகாப்பு மற்றும் மன அமைதியை வழங்கும் நம்பகமான துணையாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் மிகவும் விரும்பப்படும் பொதுக் காப்புறுதி வர்த்தக நாமமாக LMDயால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதன் ஊடாக சுமூகமான அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதில் SLICGLஇன் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

# CANDY சலவை இயந்திரங்கள், குளிர்சாதன பெட்டிகள் அறிமுகம்




கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையில் நீடித்த பயன்பாட்டு பொருட்களுக்கான முன்னணி நிறுவனமாக விளங்கும் ளுiபொயபசை ர்ழவ டுவன. அதன் விற்பனைத் தயாரிப்பு வரிசையில் ஊயுனுலு உற்பத்திகளை இணைத்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

அதற்கமைய, ஒரு முன்னணி ஐரோப்பிய உபகரண வர்த்தகநாமமான ஊயுனுலு யின் குளிர்சாதன பெட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்கள் ளுiபொயபசை காட்சியறைகளில் மாத்திரம் பிரத்தியேகமாக விற்பனை செய்யப்படவுள்ளது.

சந்தையில் காணப்படும் ஏனைய வீட்டு பயன்பாட்டு உபகரணங்களைப் போலல்லாமல், உங்களது வீட்டுக்கும், அன்றாட வாழ்க்கை முறையை எளிமையாக்க உதவும் வகையிலும், கட்டுப்படியான விலையில், தனித்துவமான மற்றும் ஸ்மார்ட் அம்சங்களை ஊயுனுலு வழங்குகிறது.

நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட இந்த ஆடம்பரமான இத்தாலிய வர்த்தகநாமமானது, ஊயுனுலு யீ (எளிமைப்படுத்தும் செயலி) ஊடாக கையடக்க தொலைபேசி சாதனங்கள் மூலமாகவோ அல்லது டிஜிட்டல் உதவியாளர் மூலமாகவோ அதன் உபகரணங்களை இயக்க வாடிக்கையாளர்களுக்கு வசதி அளிக்கிறது.

# அமானாவுக்கு சிறந்த ATM செயற்படுத்துநர் விருது




அமானா வங்கிக்கு சிறந்த பொது செயற்பாட்டாளர் (பிரிவு C) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. தேசிய டுயமெயீயல கொடுப்பனவு வலையமைப்பை செயற்படுத்தும் LankaClear Limited இனால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த LankaPay Technnovation Awards நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது.

இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பது மற்றும் தொழினுட்ப புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிதிசார் தொழினுட்ப புத்தாக்கங்களுக்கு இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கம் மற்றும் தொழினுட்பம் போன்றவற்றினூடாக நிதிசார் உள்ளடக்கம் வாடிக்கையாளர் சென்றடைவு மற்றும் சௌகரியம் ஆகியவற்றில் நாம் தொடர்ச்சியாக காண்பிக்கும் முயற்சிகளுக்கு மீண்டும் ஒரு முறை டுயமெயீயல இனால் கௌரவிக்கப்பட்டுள்ளோம்.

எமது டிஜிட்டல் செயற்படுத்தப்பட்ட சுய வங்கிச் சேவை நிலைய வலையமைப்பை விஸ்தரிப்பதற்கான முதலீட்டின் மூலமாக தற்போது நாடளாவிய ரீதியில் 29 பகுதிகளில் இந்நிலையங்களைக் கொண்டுள்ளோம். என்றார்.

# பீப்பள்ஸ் லீசிங் சீரான வளர்ச்சி





இலங்கையில் வங்கி அல்லாத நிதியியல் சேவை வழங்குனர்களில் முன்னிலை வகித்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, 2023/24 நிதியாண்டில் தனது நிதியியல் பெறுபேறுகள் மூலமாக பாராட்டத்தக்க நெகிழ்திறன் மற்றும் மூலோபாய தொலைநோக்கு ஆகியவற்றை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது.

ரூபா 3,541 மில்லியன் என்ற வலுவான வரிக்கு பிந்தைய இலாபத்தைப் பதிவாக்கியுள்ள நிறுவனம், கடந்த ஆண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 3,018 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 17.3% என்ற கணிசமான அதிகரிப்பை எட்டியுள்ளது. குறிப்பாக மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகள் சாதகமாக அமைந்த நிலையில், வருடத்தின் பிற்பாதியில் வலுவான பெறுபேறுகளை பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

இக்காலப்பகுதியில் இலாபத்திறன் குறிப்பிடும்படியாக மேம்பட்டுள்ளதுடன், ரூபா 2,438 மில்லியன் என்ற வரிக்கு பிந்தைய இலாபத்தையும் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரிவடைந்த வட்டி வீதங்களுடன், சவால்மிக்க வணிகச் சூழலுக்கு மத்தியிலும், வட்டி வருமானத்தின் வீழ்ச்சியை வெறும் 4.5% என்ற அளவில் பேண பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி ஆல் முடிந்துள்ளது.

இதனுடன் சேர்த்து, குறிப்பாக திறன்மிக்க கடன் அறவீட்டு மூலோபாயங்கள் மற்றும் கடன் திறன்வலுக் குறைப்பு திருப்பல்கள் தொடர்பில் அவதானத்துடனான ஏற்பாடுகள் போன்ற பல்வேறு மூலோபாய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதால் நிறுவனத்தால் இலாபத்திறனை மேம்படுத்த முடிந்துள்ளது.







இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, கடந்த ஜுன் மாதம் 20ஆம் திகதி நாவலையிலுள்ள HNB FINANCE இன் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக, நிறுவனத்தின் தலைமை அலுவலக ஊழியர்களால் பொசொன் பக்தி பாடல்களும் ”பொசொன் உதான” நிகழ்ச்சித் தொடரையும் டிஜிட்டல் குழு ஏற்பாடு செய்தது. மேலும் HNB FINANCE பொசோன் உதனயவின் அன்னதான நிகழ்ச்சியும் வண்ணமயமாக இருந்ததை படத்தில் காணலாம்.